பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை [illegible] காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: ஆடி 23 (7—8—72) திங்கள் — வெளியூர்: ஆடி 24 (8—8—72) செவ்வாய் [இதழ்: 46

மதுரை மாநாட்டு வசூல் ரூ. 5,10,000

மதுரை, ஆ. 6—

மதுரையில் நடந்து முடிந்த மதுரை மாவட்ட தி.மு.க. ஐந்தாவது மாநாட்டில் நுழைவுச் சீட்டுகள் மூலமும் நன்கொடைகள் மூலமும் வசூலான மொத்தத் தொகை ரூ. 5,10,000.

இந்தச் செய்தியை கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் உரையாற்றுகையில் அறிவித்தார்.

கழகத்தை அழிக்கவல்லார் யார்?

இந்த அரசைக் கவிழ்க்கும் சக்தி எது?

கனவுலகில் இருப்பவர்கட்கு மதுரை மாநாடு தரும் பதில்

கழகத் தலைவர் கலைஞரின் உணர்ச்சிமிகு உரை

மதுரை, ஆக. 6—

"கழக அரசை எந்தச் சக்தியாலும் கவிழ்க்க முடியாது என்பதற்கு இம்மாநாட்டில் கடலெனத் திரண்டுள்ள மக்கள் கூட்டமே சான்று; கழக அரசைக் கவிழ்க்க எண்ணுவோரின் கண்களைத் திறப்பதாக இந்த மாநாடு அமைந்துள்ளது"

என்று, மதுரை மாநாட்டின் முடிவில் உரையாற்றுகையில் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் பெருமிதத்துடன் குறிப்பிட்டார், அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"மதுரையில் நடைபெறுகின்ற இந்த மாநாடு, 'மாவட்ட மாநாடு' என்கின்ற பெயரில் நடைபெற்றாலும், 'மாநில மாநாடு' என்கின்ற அளவுக்கு நடைபெற்றுக்கொண்டிருப்பதாக நண்பர்கள் சொன்னார்கள்.

இது மாநில மாநாடு என்றால், எங்களுக்கிருக்கின்ற கவலையெல்லாம், 'மாநில மாநாட்டை என்ன பெயர் கொண்டு அழைப்பது என்பதாகும்!

'மதுரையில் மாநாடு நடத்தப் போகிறோம்' என்று மதுரை மதுரை மாவட்ட தளபதியர் முத்துவும் — நண்பர்களும் கேட்ட நேரத்தில், 'இது மாவட்ட மாநாடாக இருக்காது — மாநில மாநாடாகத்தான் இருக்கும்; ஆகவே, நாம் நடத்த இருக்கின்ற மாநில மாநாட்டை, அகில இந்திய மாநாடாக நடத்தினால்தான் பொருத்தமாக இருக்கும்' என்று நான் அன்றைக்கே எண்ணினேன்; அதற்கேற்ப, முத்து அவர்கள், இந்த மாவட்ட மாநாட்டை — மாநில மாநாடுகளையெல்லாம் வெற்றி கொள்ளத்தக்க அளவுக்கு நடத்தியிருக்கிறார்.

நான் இந்த மாநாட்டை, காஞ்சிபுரத்தில் நடைபெற்ற மாநாட்டோடு ஒப்பிடுவதா — இராசபாளையம் மாநாட்டுடன் ஒப்பிடுவதா — மன்னார்குடி மாநாட்டுடன் ஒப்பிடுவதா — ஊட்டியில் நடைபெற்ற மாநாட்டுடன் ஒப்பிடுவதா — தர்மபுரியில் நடைபெற்ற மாநாட்டுடன் ஒப்பிடுவதா — என்று எண்ணிப் பார்த்தேன்; அதிலே எனக்கொரு அச்சமும், ஐயமும் ஏற்பட்டது.

காஞ்சிபுரம் மாநாட்டைக் கூறினால் கே. டி. எஸ். மணியும், இராசபாளையம் மாநாட்டைச் சொன்னால் எஸ். எஸ். தென்னரசுவும், மன்னார்குடி மாநாட்டை ஒப்பிட்டால் மகளை நாராயணசாமியும், ஊட்டி மாநாட்டை ஒப்பிட்டால் முருகேசனும், தாமபுரியைக் கூறினால் துராசாராமும் கோபித்துக் கொள்வார்கள்; ஆகவே நான், அந்த மாவட்ட மாநாடுகளுடன் இந்த மாநாட்டை ஒப்பிட்டுப் பேசாமல், ஏற்கனவே நடைபெற்ற மாநில மாநாடுகளோடு ஒப்பிடுவதுதான் சரியாக இருக்குமென்று கருதுகிறேன்.

திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற மாநாட்டை, சென்னையில் நடைபெற்ற மாநில மாநாடு விஞ்சியது; சென்னையில் நடைபெற்ற மாநில மாநாட்டை இன்று மதுரையில் நடைபெற்ற மாநாடு விஞ்சியது; ஆகவே யாருக்கும் கோபம் இல்லாமல் பிரச்சினையை விளக்கிவிட்டேன்.

அந்த அளவுக்கு எழுச்சியும் — உணர்ச்சியும் — கவர்ச்சியும் — மகிழ்ச்சியும் ஏற்படத்தக்க அளவுக்கு இந்த மாநாட்டை நண்பர்கள் நடத்தியிருக்கிறார்கள். மாநாட்டின் சிறப்புக்குக் காரண கர்த்தாக்களாக இருந்த அனைவரையும் பாராட்டுகிறேன்.

இந்த மாநாட்டில் எவ்வளவு வசூல் — இது சொல்லித் தீர வேண்டிய ஒன்று; நீங்கள் எதிர்பார்க்கின்ற ஒன்று!

வேறு எந்தக் கட்சி மாநாட்டிலும், அவர்கள், வசூலைச் சொல்வதில்லை; 'கட்டணம் மூலம் வசூலிக்கப்பட்டது எவ்வளவு — நன்கொடை வாயிலாக வந்தது எவ்வளவு' என்பதை எந்த மாநாட்டிலும் மாற்றுக் கட்சி நண்பர்கள் அந்த மாநாட்டிலேயே சொன்னது கிடையாது; காரணம், அந்த மாநாடுகளுக்குக் கட்டணம் செலுத்தி வந்தவர்கள் யாருமே இருக்க முடியாது!

'கட்டணம் செலுத்தாமல் யாரும் வரலாம்; அங்கே எல்லாவிதமான வரவேற்பும் வசதிகளும் உண்டு; கட்டணம் இல்லை வாருங்கள் — வாருங்கள்' என்று அழைத்தாலும், அந்த மாநாட்டிற்கு எவ்வளவு பேர் வருவார்கள் என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்!

நண்பர்களே — நான் பெருமையோடும், மகிழ்ச்சியோடும் உணர்ச்சியோடும் சொல்லிக் கொள்கிறேன் — இந்த மதுரை மாவட்ட மாநாட்டில் நமக்குக் கிடைத்திருக்கிற தொகை — செலவு போக அல்ல — இனி மேல்தான் செலவைக் கழிக்க வேண்டும் — நன்கொடை மூலமும், நீங்கள் கட்டணம் செலுத்தி வந்த தொகையின் மூலமும் கிடைத்திருக்கின்ற மொத்தத் தொகை ரூ. 5,10,000.

ஆகவே, இது திருப்பரங்குன்றம் மாநாட்டையும் — சென்னையில் நடைபெற்ற மாநில மாநாட்டையும் வென்றுவிட்டது!

நேற்றும் — இன்றும் பேசிய நம்முடைய நண்பர்கள், கழக அரசின் சாதனைகளையெல்லாம் எடுத்துக்காட்டி, 'இந்தக் கழகத்தை வெல்வாருண்டா — இந்தக் கழகத்தை அழிப்பாருண்டா — கழக அரசுக்கு ஆபத்துவர விடுவீர்களா' என்றெல்லாம் கேட்டார்கள்.

இங்கே இலட்சக் கணக்கில் கூடியுள்ள நீங்களும், 'ஆபத்து வந்தால் விடோம் — விடோம்' என்று குரல் கொடுத்தீர்கள்!

புரட்சி நடிகர் அவர்கள், 'தமிழகத்தில் தமிழக அரசுக்கு ஆபத்து வருமானால் அதைத் தடுக்க நீங்களெல்லாம் தயாரா' என்று கேட்டார்; 'தயார் — தயார்' என்று கூறினீர்கள்!

கழக அரசைக் காப்பாற்ற நாம் அனைவரும் உறுதி எடுத்துக் கொள்கின்ற நாளாக பல நாட்கள் அமைந்தாலும், இந்நாளும் ஓர் முக்கியமான நாளாகக் கருதப்படுகிறது என்றால், அது மிகையாகாது!

எல்லா மாவட்ட மாநாடுகளிலும், அந்தந்த மாவட்டங்களில் கழக அரசு புரிந்துள்ள சாதனைகளை எடுத்து விளக்குவதை நான் கடமையாகக் கொண்டிருக்கிறேன்.

மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 4 அல்லது 5 ஆண்டுக் காலத்தில் கழக அரசு இந்த மாவட்டத்திற்கு மாத்திரம் செய்திருக்கின்ற காரியங்கள் சிலவற்றை உங்களிடம் எடுத்துச் சொல்வது என் பொறுப்பு.

1947 முதல் 1967 வரை — 20 ஆண்டுக்காலக் காங்கிரசு ஆட்சியில் — நிலப் பட்டா அளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 9,596; இந்த 5 ஆண்டுக் காலத்தில் — 1967 முதல் 1972 வரை 24,135 பேர்களுக்கு நிலப் பட்டா வழங்கியிருக்கிறோம்.

அடுத்து, 20 ஆண்டுக்காலக் காங்கிரசு ஆட்சியில் — மதுரை மாவட்டத்தில் மட்டும் 5,834 பேருக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டது; நாம் ஆட்சிக்கு வந்த இந்த ஐந்தாண்டுக் காலத்தில் 18,397 பேருக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கியிருக்கிறோம்.

விவசாயிகளுக்கு விதை — உரம் — கிணறு வெட்டுதல் — கிணறுகளை ஆழமாக்குதல் — பம்பு செட் அமைத்தல் ஆகியவற்றிற்கு, 'நீண்டகாலக் கடன் — குறுகியகாலக் கடன் — மத்தியகாலக் கடன்' என்ற பெயரால் 1960 முதல் 1967 வரையிலான காங்கிரசார் ஆட்சியில் — 7 ஆண்டுக்காலத்தில் அளிக்கப்பட்ட தொகை ரூ. 12,12,000; 5 ஆண்டுக்காலக் கழக ஆட்சியில் ரூ. 3,51,00,000 ஆகும்; இதனால் பயனடைந்த விவசாயிகள் இந்த மாவட்டத்தில் மட்டும் 17,853 பேர்.

அடுத்து, நீர்ப்பாசனம்; வைகை அணைத் திட்டம் — பெரியாறு அணை விரிவு — திருமங்கலம் கால்வாய் — மஞ்சள் ஆறு நீர்த்தேக்கம் ஆகியவற்றிற்கு 1947 முதல் 1967 வரை ரூ. 4,17,92,000 மட்டுமே வழங்கப்பட்டிருக்கிறது; கழக அரசு வந்த இந்த ஐந்தாண்டுக் காலத்தில் பாலாறு, பொருந்தலாறு நீர்த்தேக்கத் திட்டம் — பரப்பலாறு நீர்த் தேக்கத் திட்டம், வைகை சீரமைப்புத் திட்டம் — வரகநதித் திட்டம் — உப்பாறு ஓடை கால்வாய்த் திட்டம் — தாவூர் ஓடைத் திட்டம் — ஆகியவைகளுக்குத் திட்டமிட்டு ரூ. 11,39,08,000 செலவில் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

காங்கிரசாரின் 20 ஆண்டுக்கால ஆட்சியில் 2,500 கிராமங்களுக்குத்தான் மின் வசதி செய்யப்பட்டது; மின் இணைப்பு பெற்ற கிணறுகளும் 23,000-ம் மட்டுமேதான்; கழக அரசு ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு 35,000 கிணறுகள் மின் இணைப்புப் பெற்றுள்ளன.

மின்சார ஒளி இல்லாத கிராமமே இல்லை — எனச் சொல்லும் அளவுக்குக் கிராமங்களில் மின் ஒளி ஏற்படுத்தியுள்ளது கழக அரசு!

இப்படிப்பட்ட கழகத்தை, 'அழித்து விடலாம்' என்று கனவு காண்பவர்களுக்கு அளிக்கப்பட்ட பதில்களையெல்லாம் நீங்கள் அறிவீர்கள்!

கழக அரசை எந்தச் சக்தியாலும் கவிழ்க்க முடியாது என்பதற்கு இம்மாநாட்டில் கடலெனத் திரண்டுள்ள மக்கள் கூட்டமே சான்று!

கழக அரசைக் கவிழ்க்க எண்ணுவோரின் கண்களைத் திறப்பதாக இந்த மாநாடு அமைந்துள்ளது!"

(இவ்வாறு பேசிக்கொண்டிருக்கும்போது, மக்கள் நெரிசல் புழுக்கத்தால் கலைஞர் அவர்களுக்கு வியர்த்துக் களைப்பு மேலிடவே, அருகிலிருந்த வரவேற்புக்குழுத் தலைவர் முத்து அவர்களிடம், 'இத்துடன் பேச்சை முடித்துக் கொள்கிறேன்' எனக் கூறிப் பேச்சை முடித்துக்கொண்டார்.)

முதல்வர் கலைஞர் உடல் நிலை

மதுரை, ஆக. 6—

மதுரை மாநாட்டில் பேசிக் கொண்டிருக்கையில், தாங்க முடியாத மக்கள் கூட்டம் காரணமாக ஏற்பட்ட காற்றோட்டமின்மையால், முதலமைச்சருக்கு மேடையிலேயே வியர்த்துக் கொட்டத் தொடங்கிற்று.

அவர் பேசத் தொடங்கியதும், வியர்வை ஓட்டம் அதிகமாகித் திடீரென்று அவருக்கு மயக்கம் வருகிறநிலை ஏற்படவே, மக்கத்திலிருந்த திரு. எஸ். முத்து அவர்களிடம் பேச்சை முடித்துக் கொள்வதாகக் கூறிவிட்டு — உடனே காரில் ஏறி — எதிரே இருக்கின்ற சுற்றுலா மாளிகைக்குச் சென்றார்; அங்கே அவருக்குச் சிறிது மயக்கம் ஏற்பட்டது; டாக்டர்கள் வந்து பரிசோதித்தனர்.

"குறைந்த இரத்த அழுத்தத்தின் காரணமாக மயக்கம் ஏற்பட்டது" என்று டாக்டர்கள் தெரிவித்தனர்.

சில நிமிடங்கள் ஓய்வு எடுத்துக் கொண்ட பிறகு அவருக்கு உடல் நிலை சரியாகிவிட்டது; கவலைப்படுவதற்கு ஏதுமில்லை என்றும், அதிகமான மக்கள் நெருக்கத்தால் உண்டான புழுக்கத்தின் காரணமாக ஏற்பட்ட வியர்வையால் இந்த மயக்கம் ஏற்பட்டதென்றும், இரவு ஓய்வு எடுத்துக்கொண்ட பிறகு காலையில் விமானம் மூலம் சென்னை சென்று வழக்கமான பணிகளை அவர் கவனிக்கலாம் என்றும் டாக்டர்கள் கூறினர்.

மதுரை மாநாட்டில் மக்கள் எழுப்பிய ஒலி

★

மதுரை, ஆக. 6—

தி. மு. கழகப் பொருளாளர் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள், மதுரை மாநாட்டில் கூடியிருந்த முலட்சோபலட்சம் மக்களைப் பார்த்து முழக்கமிடச் சொன்னார்; அத்தனைபேரும்—அவரது வேண்டுகோளின்படி—விண்ணதிர முழக்கமிட்ட காட்சி மெய்சிலிர்க்க வைத்தது.

எம். ஜி. ஆர்.:—"மாநில சுயாட்சியை......

மக்கள்:—அடைந்தே தீருவோம்."

எம். ஜி. ஆர்.:—"தமிழக அரசை...

மக்கள்:—காப்போம்—காப்போம்."

எம். ஜி. ஆர்.:—"கலைஞர் தலைமையில......

மக்கள்:—வழி நடப்போம்."

மக்களின் இந்த முழக்கம் மாநாட்டுப் பந்தலுக்கு வெகு தூரம்வரை ஒரே குரலாக ஒலித்ததை, மாநாட்டிற்கு வெளியே இருந்த மதுரை நகர மக்கள் கேட்டு வியந்து பாராட்டினர்!

மதுரை மாநாடு -- எஸ். முத்து வரவேற்புரை

அண்ணா ஊட்டிய உணர்வால் விழித்தெழுந்தது தமிழர் சமுதாயம்

உலகெங்கும் வாழும் தமிழ்மக்கள் இதயங்களில் நிறைந்திருக்கும் ஒரே இயக்கம் தி.மு. கழகம்

எந்தச் சக்தியும் இதனைக் களைந்தெறிய முயன்றாலும் பலன் ஒன்றும் ஏற்படப்போவதில்லை

மதுரை ஆக. 5—

"கடந்த 40 ஆண்டுக்காலமாகத் தமிழ் உணர்வை-- தமிழ்ப் பற்றை மக்களிடையே ஊட்டியவர்கள் நாங்கள்!

"தந்தை பெரியார் அவர்களும்-- அறிஞர் அண்ணா அவர்களும் ஊட்டிய உணர்வால் விழித்தெழுந்த இந்தத் தமிழர் சமுதாயத்தை, இனி எந்தச் சக்தியாலும் எங்களிடமிருந்து பிரிக்க முடியாது!

"தமிழ் இனத்தின் நலனுக்காக இருப்பது இந்தக் கழகம்! அவர்களோடு இரண்டறக் கலந்துவிட்ட பேரியக்கம் இந்த இயக்கம்!

"உலகில் எங்கெல்லாம் தமிழ் மக்கள் வாழ்கிறார்களோ-- அவர்களின் இதயங்களில் நிறைந்திருக்கும் ஒரே இயக்கம் தி.மு.க.--இதை யாராலும் மறுக்க முடியாது!"

என்று மதுரை மாவட்ட தி.மு.க. 5-வது மாநாட்டில் வரவேற்புரை யாற்றுகையில், மாவட்டச் செயலாளரும்--மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவருமான திரு. எஸ். முத்து எம்.எல்.சி. அவர்கள் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்; அவர் ஆற்றிய உரை வருமாறு:—

திசைதிருப்ப இயலுமா?

"திராவிட முன்னேற்றக் கழகம் வலுவிழந்து விட்டது -- மக்கள் செல்வாக்கிழந்து விட்டது -- அழியப் போகிறது -- என்றெல்லாம் வீண் புரளி கிளப்புவோருக்குப் பதில் அளிக்கும் விதத்தில்தான் இம்மாநாட்டு ஊர்வலம் அமைந்திருந்தது; மாலை 4 மணிக்கு தொடங்கிய ஊர்வலம், முடிவதற்கு நள்ளிரவு ஆகிவிட்டது!

இதைப் பற்றிச் சில பத்திரிகைகளில் மிகவும் குறைவான—தவறான செய்திகள் வெளிவந்திருக்கின்றன; அப்படியெல்லாம் எழுதி, இலட்சோப லட்சம் மக்களின் கவனத்தைத் திசைதிருப்பி விடலாம் என்று அத்தப் பத்திரிகைகள் கருதினால், அதைவிடப் பைத்தியக்காரத்தனம் வேறு கிடையாது.

குறைகூறுகின்றவர்களின் இலட்சணம் இதுதான்

இந்நாட்டில் எங்குபார்த்தாலும், அராஜகம் -- அடக்குமுறை -- துப்பாக்கிச் சூடு நடக்கிறது என்றெல்லாம் சிலபேர் எழுதவும் -- பேசவும் கிளம்பியிருக்கிறார்கள்! அப்படிச் செய்கிறவர்கள் யாரென்று பார்த்தால், முன்பு துப்பாக்கிப் பிரயோகங்களை நடத்தியவர்களாகத்தான் இருக்கிறார்கள்!

முதுகுளத்தூரைச் சேர்ந்த கீழத்தூவல் பகுதியில் 5 பேர் சுடப்பட்டார்கள்; தூங்கிக் கொண்டிருந்த மறவர்களை எழுப்பி அழைத்துச் சென்று— கண்ணைக்கட்டி கண்மாய்க் கரையில் நிறுத்திச் சுட்டிருக்கிறார்கள்; அப்படிப்பட்ட ஆட்சி நடத்திய காமராசருக்கு சுற்றுப் பயணம் ஒரு கேடா?

அப்படியெல்லாம் அப்போது ஆட்சி நடத்தி எவ்விதமான நீதி விசாரணையும் நடத்தாதவர்கள் தான்--எந்தவிதமான நட்ட ஈடும் தராதவர்கள்தான் -- நம்மைக் குறைகூறுகிறார்கள்!

பொய் வழக்குகள் போட்ட ஆட்சி எது?

'அடக்குமுறை ஏவப்படுகிறது -- பொய் வழக்குகள் போடப்படுகின்றன' என்றெல்லாம் எதிர்க்கட்சியினர் குற்றஞ் சாட்டுகிறார்கள்; பொய் வழக்குகள்போட்ட ஆட்சி எது என்பது மக்களுக்கு தெரியாதா?

இந்தியை ஆட்சி மொழியாக்கும் அரசியல் சட்டமொழிப் பிரிவை எரிக்க நான் முற்பட்டபோது, முன்னதாக துண்டறிக்கைகள் விடுத்தும் -- மேடைகளிலே பல முறை பேசியும் -- பத்திரிகைகளிலே எல்லாம் அறிவித்தும் விட்டுத்தான் அரசியல் சட்ட மொழிப் பிரிவை எரித்தேன்; ஆனால், இந்த மகானுபாவர்கள் 'கலைஞரும் -- என்.வி.என். அவர்களும்--முத்துவும் சதி செய்து எரித்தனர்' என்று பொய் வழக்குப் போட்டார்கள்.

இப்படிப்பட்ட கோமாளிகள் தான் நமது அரசைப் பார்த்துப் பொய் வழக்குப்போடுவதாகக் கூக்குரலிடுகிறார்கள்.

மறைந்த நமது முன்னாள் அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, 'கடலூரில் பூக்கடையில் ஏழரை ரூபாய் கொள்ளையடித்தார்' என்று பொய் வழக்குப் போட்டவர்கள் தான் இந்த மகானுபாவர்கள்!

காமராசர் என்னை, 'ரௌடி' என்று சொல்லியிருக்கிறார்; முதலமைச்சரின் முன்னாலேயே, 'அவர்கள் ஒரு தலையை வெட்டினால் 10 தலைகளைக் கொண்டுவருவேன்' என்று நான் பேசியதாகவும் -- அதைமுதல்வர் கண்டிக்கவில்லை என்றும் தவறான ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்!

அப்படிச் செய்தனர் -- அழிந்தேபோயினர்

அவரது சகாவான கம்யூனிஸ்டுக்

கல்யாணசுந்தரம்தான் அப்படிப் பேசினார்; அதற்கு நான் பதில் கூறும்போது, 'எங்களால் முடியாதா' என்று கேட்டேன்; முதல்வர் கலைஞர் அவர்கள் தமது பேச்சின் இறுதியில், 'அந்த முறை நமக்குத் தேவையில்லை' என்று சொன்னது எல்லாப் பத்திரிகைகளிலும் வந்தது; சிலர் திரித்துச் செய்தி வெளியிட்டார்கள்; அது வேறு விஷயம்; அப்படியிருந்தும், 'நானாக இருந்தால் உடனே கைது செய்திருப்பேன்' என்றுவேறு காமராசர் சொல்லியிருக்கிறார்.

அப்படி எதிர்க்கட்சியினரைக் கைது செய்து கொடுமைப்படுத்தி -- அடக்குமுறை ஆட்டம் ஆடிய காரணத்தால்தான் அவர்கள் அழிந்தார்கள் -- நாம் வளர்ந்தோம்! இதை எவரும் மறந்து விடக்கூடாது!

நானாவது சாதாரண நகரச் செயலாளராக இருந்து பிறகு மாவட்டச் செயலாளராகவும் பின்னர் சட்ட மேலவை உறுப்பினராகவும் இப்போது மதுரை மாநகராட்சி மேயராகவும் வளர்ந்திருக்கிறேன்.

ஆனால் காமராசர் நிலை என்ன? அகில இந்தியக் காங்கிரசுத் தலைவராக இருந்து -- பிரதமரையே உருவாக்கும் ஆற்றலுடன் விளங்கி -- முதலமைச்சர்களை உருவாக்கி ஆட்டிவைக்கும் சக்தியாக விளங்கிய அவர், இன்றைக்கு அவற்றையெல்லாம் இழந்து -- மிகச் சாதாரண நபராகக் கீழே இறங்கியிருக்கிறார்; அந்த வயிற்றெரிச்சலில்தான், கழகத்தைப் பற்றி அவர் தாறுமாறாகப் பேசிவருகிறார்; இது எங்களுக்குப் புரிகிறது!

காமராசருக்கோ அல்லது மற்ற எவருக்குமோ நாங்கள் எப்போதும் விரோதிகளல்லர்; ஆனால், கழகத்தைப் பற்றி ஆதாரமற்ற புகார்களை எழுப்பினாலோ -- அர்த்தமற்ற குற்றச்சாட்டை எழுப்பினாலோ -- கழகத்தவர்களைத் தரக்குறைவாகப் பேசினாலோ -- கழகத்தவர் அதை எப்படிக் கண்டிக்காமல் இருக்க முடியும்?

அண்மையில் சில கட்சிகள் ஒன்று சேர்ந்து போராட்டம் நடத்தின; 'இரயில்கள் ஓடாது-- கார்கள் ஓடாது -- கடைகள் இருக்காது' என்றார்கள்; 'ஆர்ப்பாட்டம்' என்றார்கள்; என்ன ஆயிற்று? -- அன்று எல்லாம் ஓடின!

விவசாயிகள் யார் பக்கம்-- புரிந்துகொள்ளட்டும்

விவசாயிகளுக்காகப் போராட்டமாம் -- நேற்றையத்தினம் நடைபெற்ற ஊர்வலத்தைப் பார்த்தீர்களா? விவசாயிகள் யார் பக்கம் இருக்கிறார்கள் என்பதை நேற்றைய ஊர்வலம் புலப்படுத்தவில்லையா? ஆயிரக்கணக்கிலே மாட்டு வண்டிகளில் விவசாயிகள் குடும்பம் குடும்பமாக வந்திருந்தார்களே! அவர்கள் ஊர்வலத்தில் மாட்டு வண்டிகளில் இருந்தவாறே, 'பசுமைப் புரட்சிக்கு வித்திட்ட கலைஞர் வாழ்க' -- 'விவசாயிகளுக்கு உதவும் கலைஞர் ஆட்சியைக் காப்போம்' என்று முழங்கினார்களே -- அவையெல்லாம் எதனைக் காட்டுகின்றன? இதிலிருந்து விவசாயிகள் யார் பக்கம் என்பதைக் காமராசரும் -- இந்திரா காங்கிரசாரும் -- கல்யாணசுந்தரம் கம்பெனியாரும் புரிந்து கொள்ளட்டும்!

மூன்றாவது ஆண்டாக 20 சதவிகித போனசு பெற்ற தொழிலாளர்கள்

திருச்சி, ஆக. 7—

திருச்சிக்கு அருகில் திருவெறும்பூரில் உள்ள உயர் அழுத்தக் கொதிகலன் ஆலையின் தொழிலாளர்கள் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக இந்த ஆண்டில் 20 சதவிகிதம் போனசு பெற்றுள்ளனர்: இது, மத்திய அரசின் நிறுவனமாகும்.

இவ்வாண்டு போனசுத் தொகையாக மொத்தம் ரூ. 57 50 இலட்சம் வழங்கப்பட்டிருக்கிறது; சென்ற ஆண்டு ரூ 52.01 இலட்சம் வழங்கப்பட்டது.

ஏழாயிரத்தக்கு மேற்பட்ட ஊழியர்கள் இவ்வாண்டு போனசு பெற்றனர்.

1971-72-ல் இந்த ஆலையின் நிகர இலாபம் ரூ. 5 45 கோடி; இதற்கு முன்னைய ஆண்டில் ரூ 5.41 கோடி நிகர இலாபம் கிடைத்தது

கழக ஆட்சியில் மதுரைக்குக் கிடைத்த நன்மைகள் பலவாகும்

தி. மு. கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபின், மதுரை மாவட்டம் பெற்ற நன்மைகள் மிகப் பலவாகும்; மதுரை நகராட்சியை மாநகராட்சியாக ஆக்கினார் கலைஞர்; பழனியிலிருந்து கொடைக்கானலுக்கு புதிய பாதை போடப்பட்டதும் இந்த ஆட்சியில்தான்! மதுரை மக்கள் விரும்பியதெல்லாம், கழக ஆட்சியில்தான் கிடைத்திருக்கிறது!

இன்னும், மதுரையில் ஒரு தொழிற்சாலையும் -- குடிநீர்த் திட்டமும் நிறைவேற்றப்பட இருக்கிறது.

மதுரை மாவட்டத்து மக்கள் நன்றி உணர்வோடு இந்த அரசின் பக்கம் என்றும் இருப்பார்கள் என்ற நம்பிக்கை நமக்கு உண்டு.

'கலைஞர் ஆட்சிக்கு பக்கபலமாக என்றும் இருப்போம்' என்பதை நீங்கள் -- சந்தர்ப்பம் வரும் போதெல்லாம் -- உறுதிப்படுத்தத் தவறக்கூடாது எனக் கேட்டுக் கொள்கிறேன்."

மதுரை மாநாடு -- எல். கணேசன் திறப்புரை

'மக்களின் வாழ்வுடன் பின்னிப் பிணைந்திருக்கும் பேரியக்கம் தி.மு.க.'

'இந்தத் தனித் தன்மை அகில இந்தியக் கட்சிகள் எதற்கும் கிடையாது'

'மத்திய அரசின் கட்டளைகளை நிறைவேற்றும் ஏவலராக இருந்த நிலை மாறிவிட்டது'

மதுரை, ஆக. 5--

"திராவிட முன்னேற்றக் கழகம், சராசரியான கட்சியல்ல -- சாதாரணமான கட்சியல்ல -- தமிழ் இனத்திற்குப் புதிய சரித்திரம் படைக்கின்ற புதிய சக்தி! தமிழகத்தில் புதிய சகாப்தத்தைத் தோற்றுவிக்கின்ற பேரியக்கம்! தமிழ் மக்களின் வாழ்வுடன் பின்னிப் பிணைந்திருக்கின்ற கட்சி! இந்தத் தனித் தன்மை வேறு எந்த அகில இந்தியக் கட்சிகளுக்கும் கிடையாது!"

என்று மதுரை மாவட்ட தி. மு. க. 5-வது மாநாட்டைத் தொடங்கி வைத்துப் பேசுகையில், திரு. எல். கணேசன் எம்.எல்.ஏ. சுட்டிக் காட்டிக் குறிப்பிட்டார்; அவரது உரை வருமாறு:--

"நாகரிகங்கள் எல்லாம் நதிக் கரை ஓரத்தில்தான் தோன்றியதாக வரலாறு கூறும்; கங்கை நதிக்கரையிலும் -- நைல் நதிக் கரையிலும் தோன்றிய நாகரிகங்களைபற்றி நாம் வரலாற்று ஏடுகளில் படித்திருக்கிறோம்.

அதுபோலவே, தமிழர் தம் நாகரிகம் இந்த வைகை நதிக்கரையில் தான் வளர்ந்திருக்கிறது.

இதே மதுரையில்தான் பாண்டிய மன்னர்கள் முச்சங்கம் அமைத்து -- முத்தமிழை வளர்த்தார்கள்! காலத்தால் அழியாத ஞாலப் புகழ்பெற்ற சாலச் சிறந்த இலக்கியங்களைப் படைத்தார்கள்!

நீதிக்காக உயிர் துறந்த பாண்டியன் நெடுஞ்செழியன் வாழ்ந்த மண் இந்த மண்தான்!

கணவனுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்காக அரசவையில் கண்ணகி வாதாடியது இந்த மதுரையில்!

இவ்வாறு வரலாற்றுப் புகழ் பெற்ற மாமதுரையில்தான், மாறனின் தலைமையிலே நாமெல்லாம் இன்றைக்குக் கூடியிருக்கின்றோம்.

நேற்று நடந்த மாபெரும் ஊர்வலத்திலும் -- இன்றைக்கு இந்த மாநாட்டிலும் மக்களிடையே காண்கின்ற உணர்ச்சியையும், எழுச்சியையும் பாடுவதற்குக் கம்பனில்லையே -- என்று தான் எண்ணத் தோன்றுகிறது!

'எதிர்க் கட்சியாக இருந்தால் தான் கூட்டம் சேரும்' என்று சிலர் கூறுகிறார்கள்; ஆனால், ஆளும் கட்சிக்கு இந்த அளவுக்கு மக்கள் இலட்சக்கணக்கில் கூடியிருக்கிறார்கள் என்றால் என்ன பொருள்?

இந்தியத் துணைக்கண்டத்தில் எத்தனையோ மாநில அரசுகள் இயங்குகின்றன; எத்தனையோ முதலமைச்சர்கள் இருந்திருக்கின்றார்கள் – இருக்கின்றார்கள்.

ஆனால் அகில இந்தியாவிலும் தமிழ்நாட்டில் நடக்கின்ற கழக ஆட்சியைப் போல் சிறந்த ஆட்சியும் இல்லை -- கலைஞரைப் போல் சிறந்த முதலமைச்சரையும் காண முடியவில்லை!

மத்தியில் இருப்பவர்கள் இட்ட கட்டளைகளை நிறைவேற்றும் ஏவலராகத்தான் இதற்குமுன் இருந்த அரசுகள் இருந்தன; அதை மாற்றிக் காட்டியவர் அறிஞர் அண்ணா அவர்கள் ஆவார்.

இந்திய அரசியலில் தமிழ்நாட்டிற்கென்று இன்றைக்கு ஒரு சிறப்பிடம் ஏற்பட்டிருக்கிறது.

அறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துக் கொடுத்த வைகளைத் தொடுத்து முடிக்கும் ஆற்றலைப் பெற்ற கலைஞர் அவர்கள், இந்திய அரசியலில் தமிழகத்திற்கென்று இன்றைக்கு இருக்கின்ற சிறப்பிடத்தை விட

(4-ம் பக்கம் பார்க்க)

மதுரை மாவட்ட தி.மு.க. 5-வது மாநாட்டில் முரசொலி மாறன் தலைமையுரை

தியாகத்திற்குத் தயாராவீர்

[★]

இருப்பது ஓர் உயிர்-சாவது ஒருமுறை-அந்த சாவை நாட்டு நலனுக்காக ஏற்பீர்

கேடுகெட்ட காரியத்தைச் செய்ய முனைவோரை உலகம் கேட்டுச் சிரிக்கும் வண்ணம் விறுவிறுப்புடன் பணியாற்ற முனைவீர்

அதிகாரம் நிறைந்துள்ள அரசியல் சட்டத்தின் 'கோர வடிவம்'- கழகத் தோழர்கட்கு முன்னறிவிப்பு

மதுரை, ஆக. 5—

"மாநில அரசுகளைக் கவிழ்ப்பதற்கு அரசியல் சட்டத்தில் எளிதான இடம் இருக்கிறது; அரசியல் சட்டத்தின் 356 வது பிரிவின்படி தமிழ்நாட்டுக் கவர்னர், 'இங்கே -- தமிழ்நாட்டில் அரசியல் சட்டத்தின்படி ஆட்சி நடக்கவில்லை' என்று மத்திய அரசுக்குக் கடிதம் எழுதினால் போதும் -- மறு விநாடியோ அல்லது மறுநாளோ குடியரசுத் தலைவர், சட்டமன்றத்தைக் கலைத்து உத்தரவு பிறப்பித்துவிடலாம்! அந்த எண்ணத்தில்தான் அண்மையில், 'விவசாயிகள் போராட்டம்' என்கிற பெயரில் காங்கிரசுக்காரர்களும் – கம்யூனிஸ்டுகளும், காலிகளும் – கூலிகளும் இங்கே வன்முறைப் போராட்டத்தை நடத்திக் குழப்பம் செய்ய நினைத்தார்கள்; குழப்பம் நீடித்திருந்தால், அப்படித்தான் நடந்திருக்கும்!

"மேற்கு வங்கத்தில் ஆட்சியைக் கவிழ்த்தார்கள் -- குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டுவந்தார்கள்; முன்பு ஆட்சி நடத்திய மார்க்சிஸ்டுகள் கட்சியின் இரண்டாந்தரத் தலைவர்கள் எண்பது பேரைச் சுட்டுக் கொன்றார்கள், அதன் மூலம் அந்தக் கட்சியின் வலிவைக் கெடுத்தார்கள்; அதுபோது, 'இங்கேயும் கட்சியைக் கவிழ்க்க வேண்டும் -- ஜனாதிபதி ஆட்சியைக் கொண்டுவர வேண்டும்' என்று நினைக்கிறார்கள்!

'அப்படிப்பட்ட எண்ணம் அவர்களுக்கு இருந்து, ஆட்சியைக் கவிழ்த்தாலும் -- கழகத் தலைவர்களைச் சுட்டுக் கொன்றாலும் -- மறுபடியும் ஆறு மாதத்திற்குப் பிறகு அவர்கள் தேர்தலைச் சந்தித்தே தீரவேண்டும்; அப்படித் தேர்தலைச் சந்தித்தால், 184 – 194 என்று ஆகுமே தவிர, குறையாது; ஆகவே, இனிமேல் நாம் அவர்களைப் பார்த்து, 'கவிழ்த்துப் பார்' என்று அறைகூவல் விடுக்கின்ற நிலைக்குச் செல்ல வேண்டும்!

'இப்போது தமிழக அரசு, ரிசர்வ் பாங்கியிடமிருந்து அதிகமான பற்று (ஓவர் டிராப்ட்) வாங்கியிருக்கிறது! அதை வைத்து, 'உன்னால் நிர்வாகத்தை நடத்த முடியவில்லை' என்று கூறி இந்த அரசைக் கவிழ்த்துவிடலாம்; ஆகவே தோழர்களே -- 'அவர்கள் கவிழ்க்கமாட்டார்கள்' என்ற நினைப்பில் இல்லாமல் 'இன்னும் ஆறு மாதத்தில் தேர்தல் நடக்கப்போகிறது' என்ற விறுவிறுப்பு உணர்வுடன் நாம் பணியாற்ற வேண்டும்; அப்படிப் பணியாற்றினால்தான், மத்திய அரசு, தி. மு. கழக அரசைக் கவிழ்த்த பிறகு மீண்டும் தி. மு. கழகம் பதவிக்கு வர முடியும்; அப்போது உலகம் அவர்களைப் பார்த்து, 'எவ்வளவு கேடுகெட்ட காரியத்தைச் செய்துவிட்டீர்கள்' என்று கேட்டுச் சிரிக்கும்!

"ஏழைகளின் -- பாட்டாளிகளின் -- பிற்படுத்தப்பட்டவர்களின் -- தாழ்த்தப்பட்டவர்களின் ஒரே பாதுகாவலன் தி. மு. கழகம்! ஆகவே, கழக அரசு கவிழ்வது என்பது, ஏழைகளுக்கு -- பாட்டாளிகளுக்கு -- பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இந்திரா காந்தி விடுக்கும் அறைகூவல் போன்றதாகும்!

"மேற்கு வங்கத்தில் நடந்ததைப்போல் எண்பது பேர் இங்கே சுடப்படலாம்; 'அதில் நமது பெயரும் இருக்க வேண்டும்' என்ற உணர்வுடன் கழகத் தோழர்கள் பாடுபட வேண்டும்.

"அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள் -- 'இருப்பது ஓர் உயிர் -- சாவது ஒரு முறை -- அந்தச் சாவையும் நாட்டுக்காக ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்று! அது போல், நாட்டுக்காக எவ்விதத் தியாகத்தையும் செய்ய நாம் அனைவரும் தயாராக இருக்கவேண்டும்"

என்று மதுரை மாவட்ட தி. மு. கழக மாநாட்டில் தலைமையுரை ஆற்றுகையில் முரசொலி மாறன் எம். பி. அவர்கள் தெள்ளத் தெளிவுறச் சுட்டிக்காட்டிக் கழகத் தோழர்களைக் கேட்டுக்கொண்டார்; அவர் ஆற்றிய உரை வருமாறு:—

மாநிலக் கட்சிகளை விழுங்கி ஏப்பமிட்ட பின்னரே இந்திரா காங்கிரசு உயர்ந்திருக்கிறது

"இந்திரா காங்கிரசு இன்று அகில இந்தியக் கட்சியாக இருக்கிறது என்றால், மாநிலக் கட்சிகளை விழுங்கி ஏப்பமிட்டுவிட்டுத்தான் அப்படி உயர்ந்திருக்கிறது!

பஞ்சாபில் அகாலிதளக் கட்சியை உடைத்துச் சிதைத்து ஏப்பமிட்டுவிட்ட பின்னர்தான் இந்திரா காங்கிரசு, அங்கே கோட்டையைப் பிடித்திருக்கிறது!

மேற்கு வங்கத்தில் ஐக்கிய முன்னணி கொடி கட்டிப் பறந்தது; பங்களா காங்கிரசை இந்திரா காங்கிரசு தனது வயிற்றுக்குள் போட்டுக்கொண்டு விட்டபின், அந்தக் கட்சிகளின் சாம்பல் மேட்டில் அது உட்கார்ந்துகொண்டிருக்கிறது!

ஆந்திரத்தில் தெலிங்கானா பிரஜா சமிதி செல்வாக்குப் பெற்றிருந்தது; இன்று அது எங்கே -- இந்திரா காங்கிரசு, அதை ஜீரணித்துவிட்டது!

ஒரிசாவில் உத்கல் காங்கிரசை விழுங்கிய பின்னர்தான், அகில இந்தியக் கட்சியாக இன்று அங்கே அது அமர்ந்திருக்கிறது!

இந்திரா காங்கிரசின் பிடிக்குள் அகப்படாமல் தனித்து நின்று வளர்ந்துவரும் கட்சி -- திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான்! தமிழ்நாட்டில் எதிர்க் கட்சி ஆட்சி நடைபெறுவது கண்டு அவர்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை!

கூடுவிட்டுக் கூடு பாய்கிறார் குமாரமங்கலம்

சேசரி தாமிரச் சுரங்கத்தில் ஒரு மாதமாக வேலை நிறுத்தம் நடைபெறுகிறது; பத்தாயிரம் பேர் வேலையின்றித் தவிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது; இதுபற்றி அந்தத் துறையைச் சார்ந்த அமைச்சர் மோகன் குமாரமங்கலத்தைக் கேட்டால், 'அவர்களாகச் சமரசம் செய்துகொள்வார்கள்' என்று பதிலளிக்கிறார்; அப்படிப்பட்டவர் இங்கே வந்தால், 'சிம்சன் பிரச்சினையைத் தீர்க்காவிட்டால் சும்மா விடமாட்டோம்' என்கிறார்; 'துப்பாக்கிச் சூடுபற்றி நீதி விசாரணை வேண்டும்' என்கிறார்; ஆனால் அவர் கட்சியைச் சேர்ந்த செயலாளர், 'நீதி விசாரணை வேண்டாம்' என்று கையெழுத்துப் போட்டிருக்கிறார்.

குமாரமங்கலத்துக்கு ஆண்மை இருந்தால், 'உத்தரப் பிரதேசத்தில் நடந்த துப்பாக்கிச் சூடுபற்றி விசாரணை நடத்தவேண்டும்' என்று சொல்லட்டும் -- சொல்ல முடியுமா -- சொன்னால் அவருடைய சீட்டுக் கிழிந்துவிடாதா?

இந்தியாவை ஆளுவது உத்தரப் பிரதேசம்தான்; மோகன் குமாரமங்கலம் இந்தியா முழுவதற்கும் பொறுப்பான அமைச்சரா -- இல்லை -- தமிழ்நாட்டுக்கு மட்டும் அமைச்சரா? உ. பி. பற்றி அவர் ஏன் கேட்கவில்லை?

இந்திரா காந்தி கேட்கத் தவறியது ஏன்?

இப்போது பீகாரில் பஞ்சம் ஏற்பட்டுப் பட்டினியால் தவிக்கிறார்கள்; உணவுக் கிடங்குகள் கொள்ளை போகின்றன; 12-பேர் செத்திருக்கிறார்கள்; 'வறுமையை ஒழிப்போம்' என்ற கோஷத்தை எழுப்பி ஆட்சிக்குவந்த இந்திரா காந்தி, பீகார் முதல்வரிடம் இது பற்றிக் கேட்கத் தவறியது ஏன்? அந்த அளவுக்கு சனநாயகப் பண்பு குறைந்துவருகிறதா என்ன?

ஏட்டளவில் இருக்கிறது அதிகாரம்-- என்ன செய்ய இயலும் இதன்மூலம்?

இந்தியப் பொருளாதாரம் இப்போது மிகவும் சிரமமான நிலையில் உள்ளது; விலைவாசிகள் ஏறிக்கொண்டிருக்கின்றன; ரூபாயின் மதிப்பும் குறைந்திருக்கிறது; அப்படிப்பட்ட விலைகளைக் குறைக்கும் சக்தி மாநில அரசுக்கு இல்லை.

படித்தவர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தை முழு அளவில் போக்க மாநில அரசால் இயலாது; அவர்களுக்கு வேலை கொடுக்கத் தொழிற்சாலைகளைத் திறக்கவேண்டும் -- அப்படித் தொழிற்சாலைகளைத் திறக்க மாநில அரசுக்கு அதிகாரமில்லை!

அரசியல் -- பொருளாதார -- சமுதாயத் துறையில் நீதி கிடைக்கத்தான், 'அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும்' என்கிறோம்; அப்படிப்பட்ட சமுதாயத்தை அமைக்கத்தான் தி. மு. கழகம் மாநில சுயாட்சி கேட்கிறது; 'தானே இயங்கும் அரசாக மாநில அரசு இருக்கவேண்டும்' என்கிறோம்.

இலங்கையில் மத்திய அரசு இருக்கிறது -- அதற்கடுத்து முனிசிபாலிடி இருக்கிறது; அதேபோல, பிரான்சிலும் -- இங்கிலாந்திலும் மத்திய அரசுகள் இருக்கின்றன; அதற்கடுத்து முனிசிபாலிடிகள் இருக்கின்றன; ஆனால், இங்கேதான், மத்திய அரசுக்கு அடுத்து மாநில அரசும் -- முனிசிபாலிடிகளும் இருக்கின்றன.

இப்போது சுயாட்சி இல்லையா என்றால், இருக்கிறது -- ஏட்டளவில்! மத்திய அரசுக்கும் -- மாநில அரசுகளுக்கும் அதிகாரங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன; ஆனால், தலைமையமைச்சர் நினைத்தால் மாநில அதிகாரங்களை எடுத்துக் கொள்ளும் நிலைதான் இருக்கிறது!

தொழிற்சாலைகளை நடத்தும் உரிமை இதுவரையில் மாநில அரசுக்குத்தான் இருந்தது; ஆனால் இப்போது 68 தொழில்களை மத்திய அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது; பீளேடு செய்வதற்கும், சோப்பு -- செருப்பு செய்வதற்கும் மத்திய அரசின் அனுமதி வேண்டுமாம்; இதன் விளைவு, நமது வரிப் பணம் பாழாவது தான்!

'ஈயடிச்சான் காப்பி' போல் செய்துகொண்டதன் விளைவு

டில்லி அரசு, 'கேப்பிடல் அவுட்லே' என்ற வகையில் ரூ. 90 கோடி செலவு செய்திருக்கிறது; இதை மாநிலங்களுக்குப் பகிர்ந்து தந்திருந்தால் மாநில அரசுகளுக்கு பயனுள்ள காரியங்களைச் செய்வதற்கு வழிவகை ஏற்பட்டிருக்கும்; ஆனால், அவர்கள் விருப்பம்போல் செலவு செய்யக்கூடிய அரசியல் சட்டத்தை இயற்றி வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அரசியல் சட்டத்தை இயற்றியபோது பி. என். ராவ் என்ற நிபுணரை, பல்வேறு நாட்டு அரசியல் அமைப்புகளைப் பார்த்து வரச் செய்து அதில் சேர்த்துக் கொண்டார்கள்; ஆனால் பொருளாதாரப் பிரச்சினையில் 1935-ம் ஆண்டு அரசியல் சட்டத்தை அப்படியே 'ஈயடிச்சான் காப்பி' செய்துகொண்டார்கள்; காலனி ஆதிக்கத்திற்கு என்னென்ன தேவையோ அத்தனையும் இந்த அரசியல் சட்டத்தில் இருக்கிறது.

மத்திய அரசு அமைக்கும் நிதிக் குழு, மாநிலங்களில் மேலதிகாரி போல் நடந்து கொள்கிறது; தமிழகத்தில் நடைபெற்று வந்த ஒரு படி அரிசித் திட்டத்திற்கு, 'நிதி உதவி தரமாட்டோம்' என்று அந்த நிதிக் குழு கூறியது.

அர்த்தமற்ற அதிகாரங்கள் ஆளுநருக்கு இருப்பது அவசியந்தானா?

இப்படி மேலதிகாரம் செய்யக்கூடிய அரசியல் அமைப்புக்கு மற்றோர் உதாரணம் கவர்னர் பதவி; இராஜாஜி அவர்கள் ஒரு முறை முதல்வர் பதவியை ஏற்கின்றபோது, 'கவர்னர் தம் விருப்பம்போல் நடந்தால் -- என் பணியில் குறுக்கிட்டால் -- முதல்வர் பதவியை ஏற்றுக்கொள்ள மாட்டேன்' என்று கூறினார்.

கவர்னர் பதவி என்பது, 'மத்திய அரசின் ஏஜெண்டு -- கண்காணிப்பவர்' என்றுதான் பொருள்படுகிறது; அவர் நினைத்தால், தமிழகத்தில் கலைஞர் அவர்களை முதலமைச்சர் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, வேறு யாரையும் முதலமைச்சராக்கிவிட முடியும்; ஆனால் அவர், ஆறு மாதத்தில் எம்.எல்.சி.-யாகவோ, எம்.எல்.ஏ.-யாகவோ தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இப்படிப்பட்ட அதிகாரம் இருப்பது நியாயந்தானா?

தமிழ்நாடு ஆளுநர் கே. கே. ஷா அவர்கள், நமக்கெல்லாம் நண்பர்-- நல்லவர்; ஆனால், ஆளுநர் பதவிக்கு இருக்கின்ற அதிகாரம், முதலமைச்சர் பதவியிலிருந்து கலைஞரை அவரால் நீக்கிவிட முடியும்; நந்தினி சத்பதி போன்றவர்களை முதலமைச்சர்களாக ஆக்க முடியும்.

இராசமன்னார் குழு, 'ஆளுநர் இருக்கலாம்; ஆனால் அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும்' என்று கூறியிருக்கிறது; இதுபற்றி தி. மு. கழக ஆய்வுக் குழு முதலமைச்சர் அவர்களை அணுகி, 'இது பற்றி உங்கள் கருத்து என்ன?' என்று கேட்டது; அதற்கு முதலமைச்சர், 'ஆளுநர் பதவியே தேவையா என்பதை ஆராயுங்கள்' என்றார்.

ஒரு மாநில முதலமைச்சர் பதவி விலகினால், அடுத்த ஆறு மாதத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி -- அதற்குப் பிறகு தேர்தல்; அல்லது முதலமைச்சர் பதவி விலகினால், அடுத்த முதலமைச்சர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்; அதற்கு நாளாகும் என்றால், அப்போது ஆளுநர் நிர்வாகத்தைக் கவனித்துக்கொள்ள வேண்டும்; இந்த இடைவெளிக் காலத்திற்குத்தான் ஆளுநர் பதவி தேவை.

ஆளுநர் இன்றி இந்தியக் கூட்டாட்சியை நடத்த இயலும் என்பதற்கு ஜெர்மனி ஓர் உதாரணம்

ஆனால், அந்த இடைவெளி -- அந்தச் சூனியம் -- இல்லாமலேயே இருக்கலாம் என்பதற்கு ஜெர்மனி எடுத்துக் காட்டாகும்; அங்கே முதலமைச்சர் பதவி விலகினால், ஒரு மாதத்திற்குள் இன்னொரு

(4-ம் பக்கம் பார்க்க)

மதுரை மாநாட்டில் அறிஞர் அண்ணு படத் திறப்பு -- மூக்கையா தேவர் உரை

‘மேதைகள் உள்ளத்திலும்-- ஏழைகளின் இதயத்திலும் அண்ணு நிறைந்திருக்கிருர்

‘விழுதுகளால் வேரூன்றி நிற்கும் ஆலமரம்போல் மக்களுக்குப் பயன்பட்டு வருகிறது தி. மு. கழகம்’

மதுரை, ஆக. 5—

" தி. மு. கழகம் ஓர் ஆலமரத்தைப் போன்றது ; ஆலமரம் பல விழுதுகளைவிட்டு மண்ணில் வேரூன்றிப் பலம் பெற்றிருப்பதுபோல். ஆல விழுதுகளை -- தலைவர்களை உருவாக்கிவிட்டு அண்ணு அவர்கள் சென்றிருக்கிருர்கள்; இன்றைக்கு அண்ணு அவர்கள் இல்லாவிட்டாலும், விழுதுகளால் வேரூன்றி நிற்கும் ஆலமரம்போல் நாட்டு மக்களுக்குப் பயன்பட்டு வருகிறது தி.மு.க.!

" அறிஞர் அண்ணு அவர்கள் ஒரு பறவையைப் போன்றவர் ; பறவை கோவில் கலசத்திலும் சென்று உட்காரும் -- ஏழைகளின் குடிசையிலும் சென்று அமரும்; அதேபோல் அண்ணு அவர்கள் மேதைகளின் உள்ளத்திலும் உறைந்திருக்கிருர் -- ஏழைகளின் இதயத்திலும் நிறைந்திருக்கிருர்!

" அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றி இன்றைக்கு நாட்டு மக்களின் எண்ணத்தைப் பிரதிபலிக்கும் வகையில் கலைஞர் அவர்கள் பணியாற்றிவருகிருர்!

" அறிஞர் அண்ணு அவர்கள் ஆட்சியைக் கைப்பற்றி முதன்முதலில் பதவிப் பொறுப்பேற்றபோது நேராக மக்களிடம்தான் சென்ருர்!

" அறிஞர் அண்ணு அவர்கள், நற்குணத்தில் -- நல்ல உள்ளத்தில் தெய்வத் தன்மைப் படைத்தவர் ஆவார்!"

இவ்வாறு மதுரை மாவட்ட தி.மு.க. 5-வது மாநாட்டில், பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் திரு. பி. கே. மூக்கையா தேவர் அவர்கள், பேரறிஞர் அண்ணு அவர்களின் உருவப் படத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார் ; அவர் ஆற்றிய உரை வருமாறு:--

கீழ்த்தரப்புத்தி போகவில்லை

"சமுகு உயர உயரப் பறந்தாலும், கீழே கிடக்கின்ற அழுகிய பொருள்களில்தான் நாட்டம் செலுத்தும்!

அதுபோல் இந்திரா காங்கிரசார், எவ்வளவுதான் உயர்ந்திருந்தாலும் -- அவர்களுக்கு எதிர்க்கட்சி ஆட்சியைக் கவிழ்க்கும் கீழ்த்தரப் புத்திதான் இருக்கிறது!

மாநில முதலமைச்சர்களை ஏற்று மதி செய்வதுதான் ஒரு கட்சி ஆட்சியின், நடைமுறை என்ருல், மக்கள் பிரதிநிதிகட்கு என்ன மதிப்பு இருக்கிறது?

மத்திய அரசு போட்ட எந்த சோஷலிசத் திட்டத்தை நிறைவேற்ருமல் போய்விட்டது தி.மு. க்ழக ஆட்சி?

'யார் முந்திச் செய்வது' என்று போட்டி போட்டுக்கொண்டு இங்கே சோஷலிசத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

ஒரே உருவம் அவசியம்

ஆகவே தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், கழுகுகளுக்கும் -- கோட்டான்களுககும் இடமில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

தமிழ்நாட்டு மக்களுக்கு ஒரே உருவம்தான் வேண்டும் அது கலைஞரது உருவம்தான்.

தமிழ் மக்கள் நல்வாழ்வுக்கு உறுதி அளிக்கக்கூடிய ஒரே ஆட்சி தி.மு. கழக ஆட்சிதான்-- ஒரே கட்சி தி. மு. கழகம்தான் என்பதை நாம் பார்க்கிரேம்.

புரியாதவர்களுக்கு அந்த நிலைதான் ஏற்படும்

இன்றைக்குத் தமிழ்நாட்டு மக்களுக்கென்று தி. மு. கழகமும் -- கலைஞரும் இல்லாவிட்டால் என்ன் ஆகும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுப்.

சிலருக்கு இது புரியவில்லை; அவர்கள், 'கற்கண்டு' என்று எண்ணிக் கொண்டு கல்லைத் தின்கிருர்கள்! இதனுல் அவர்கள் பலதான் உடையும்!

கடல் அலையும் நினைவூட்டும்

இம்மாநாட்டில் குழுமியுள்ள மக்கள் திறள், அண்ணு அவர்களை மறக்காது! அவர்கள் மறந்தாலும் அண்ணு அவர்கள் துயில் கொள்கின்ற இடத்திற்கு அருகிலுள்ள கடல் நீர், தனது அலைகளால் அவரை நினைவூட்டிக் கொண்டே இருக்தும்!

கெடுதல் செய்ய எண்ணினுல்.

தேவரின் எண்ணங்களைப் பிரதிபலிக்கின்ற வகையில் நடைபெற்றுவரும் கலைஞரின் ஆட்சிக்குத் தென் பாண்டி மக்கள் சமுதாயம் என்றென்றைக்கும் உறுதுணையாக இருக்கும்.

இந்த ஆட்சிக்கு எதிராகக் கெடுதல் செய்வகர்களானுல். இந்தச் சமுதாயம் கலைஞர் பின்னுல்தான் நிற்கும் என்று உறுதி கூறிக்கொள்கிறேன்.

அண்ணுவின் நாமம் வாழ்க!"

சமாதானப் பணிகளுக்கு அணுசக்தி சோதனை

புதுடில்லி, ஆக. 7—

"பூமிக்கு அடியில் சமாதானப் பணிகளுக்காக அணு சக்தி சோதனை நடத்துவது நாட்டின் பொருளாதாரததிற்கு நலன் செய்ய முடியுமா என்பதை இந்தியா ஆராய்ந்து வருகிறது; அத்தகைய சோதனையில், சூழ்நிலை பாதிக்கப்படாமல் அணுசக்திக் குழு பார்த்துக கொளளும்"

என்று மக்களவையில், தலைமையமைச்சர் இந்திரா காந்தி தெரிவித்தார்.

மத்திய ஆட்சியில் சனநாயக முறைக்குப் பஞ்சம் வந்துவிட்டதா?

எதிர்கட்சித் தலைவர்களை மதிக்க மறுப்பதேன்?

மதுரை, ஆக. 5—

"சிம்லா பிரச்சினையை நினைத்தால் வேதனையாக இருக்கிறது; பூட்டோ இஙகே வரும்போது -- அவருடன் எதிர்க கட்சித் தலைவர்களும் வந்தார்கள்!

"ஆனுல், தலைமையமைச்சர் இந்திரா காந்தி, அமைச்சர்கள் சிலருடன் மட்டுமேதான் அங்கு சென்ருர்; எதிர்க்கட்சித் தலைவர்களை இந்திரா அழைத்துச் செல்லவில்லை; சிம்லாவுக்கு வாஜ்பாயும் -- பிலு மோடியும் சென்றதுகூட இந்திராவுக்குப் பிடிககவில்லை!

எப்படியெல்லாம் நடக்கவேண்டுமென்று எதிர்க் கட்சித் தலைவர்களைப் பூட்டோ கலந்தாலோசித்து--அதன்படி நடந்துகொண்டார்; ஆனுல், நாடாளுமன்றம் கூடுவதற்குமுன்பே தலைமையமைச்சர், குடியரசுத் தலைவரின் கையெழுத்தை ஒப்பந்தத்தில் வாங்கிவிடுக்கிருர்; ஏன் அப்படி அவசரமாக வாஙகவேண்டும?

சனநாயகத்தை மக்கள் தேடிக்கொண்டிருக்கின்ற பாகிஸ்தானில், பூட்டோ, எதிர்க் கட்சித் தலைவர்களை மதிக்கிருர்; ஆனுல, மிகப் பெரிய சனநாயக நாடு என்று பெயர்பெற்ற இந்தியாவை ஆளும் இந்திரா காந்தி, எதிர்க் கட்சித் தலைவர்களை ஏன மதிககத் தவறுகிருர்? டில்லியில், சனநாயக நெறிமுறைகளுக்குப் பஞ்சம் வந்துவிட்டதா?"

-- முரசொலி மாறன், எம்.பி.

(மதுரை மாநாட்டுத் தலைமையுரையில்)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

முதலமைச்சர் பதவி ஏற்க வேண்டும்; அதிலும் தடங்கல் இருந்தால் சட்டமன்றம் தானுகக் கலைந்துவிடும்; பிறகு குறிப்பிட்ட நாளில் மறுதேர்தல் நடக்கும். அதுமட்டுமல்ல -- அங்கே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டால், 'இன்னுர்மீது நம்பிக்கையில்லை; ஆனுல் இன்னுர்மீது நம்பிக்கை இருக்கிறது' என்று முன்மொழியப்பட வேண்டும். இப்படிப்பட்ட ஒரு முன்மாதிரி அரசியல் அமைப்பு ஜெர்மனியில் உண்டு;

ஆனுல் இங்கே ஆளுநருக்கு அதிகமான அதிகாரங்கள்; அதுமட்டுமல்ல -- ஆண்டொன்றுக்கு ரூ. 13 இலட்சம் செலவழிக்கப்படுகிறது; 'ஏழை நாடு' என்று சொல்லிக்கொண்டு ஆளுநர் பதவியைப் பேணிக் காப்பதற்கு இவ்வளவு பணம் செலவழிக்க வேண்டுமா? ஆகவே, ஆளுநர் இல்லாமல் இந்தியக் கூட்டாட்சியை நடத்தமுடியும் என்பதத்கு உதாரணம் ஜெர்மனி!

இன்று தமிழக ஆளுநர் ஊருக்கு ஊர் செல்கிருர் -- குறைகளைக் கேட்கிருர்; எம்.எல் ஏ.-க்களை, எம்.பி.-க்களை சந்தித்தால், அதை நம்மால் புரிந்துகொளள முடியும்; ஆனல, 'விலாசம்' தெரியாதவர்களை அவர் சந்திக்கிருர்; அவர்கள, 'மதுரை மாநாட்டுப் பந்தல் போடுவதற்கு எப்படி எரிபடி நிதி வசூலித்தார்கள்' என்பதைக் கூறுகிருர்கள்; வெளியே வந்தவுடன், 'கவர்னர் அதற்கு இப்படிச் சொன்னுர் -- அப்படிச் சொன்னுர்' என்று கதை கட்டி விடுகிருர்கள்; ஆளுநர் அதை மறுக்காவிட்டால், அது, உண்மையென்ருகிவிடும் அல்லவா?

ஆஸ்திரேலியாவில் 72 ஆண்டுகளுக்குமுன் அரசியல் சட்டம் தீட்டப்பட்டது: இப்போது அதில் மாற்றம் செய்யப்பட வேண்டுமென்று அங்குள்ள ஆறு மாநிலங்களும் கேட்டிருக்கின்றன; 'கையைப் பிசைந்துகொண்டு தலைநகருக்குச் செல்ல வேண்டியிருக்கிறது' என்று அவர்கள் கூறுகின்றனர்; இங்கேயும் மாநில முதல்வர்கள் பிச்சைக்காரர்கள்போல் டில்லிக்குப் போகவேண்டியிருக்கிறது.

ஆஸ்திரேலியாவில் வரும் செப்டம்பரில் மாநிலங்கள் மாநாடு நடத்தத் தலைமையமைச்சரை அழைத்திருக்கிருர்கள்; அவரும் போகவிருக்கிருர்; ஏனென்ருல், அங்கே பக்தவதசலங்கள் இல்லை!

அதுமட்டுமல்ல; அந்த மாநிலங்கள், 'இன்றைய ஆஸ்திரேலியாவின் தலைமையமைச்சர் தாராள மனமுடையவர்; ஆகவே, இப்போதுதான், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் பெறமுடியும்' என்று கூறுகின்றன.

அதுபோலத்தான் நாமும் கூறுகிரேம் -- 'இந்திரா காந்தியின் இதயம் பெரியது; தாராள சிந்தையுடையவர் அவர்; ஆகவே, இப்போதுதான் நாம் மாநில சுயாட்சியைப் பெறமுடியும' என்று கேட்டுக் கொண்டிருக்கிரேம்."

மதுரை மாநாட்டு நிகழ்ச்சிகள்

மதுரை மாவட்ட தி. மு. க. மாநாட்டின் முதல் நாள நிகழ்ச்சி 5—8—72 காலை தொடங்கியது.

மாநாட்டுத் தலைவர் முரசொலி மாறன் அவர்களைத் தலைமை தாங்குமாறு முன்மொழிந்து வரவேற்புக் குழுத் தலைவர் திரு. எஸ். முத்து முனமொழிந்ததை வழிமொழிந்து அமைச்சர்கள் என். வி. நடராசன், ஓ. பி. இராமன், பி. எஸ். மணியம் எம்.எல்.ஏ., ப முத்துசாமி எம்.எல். ஏ. ஆகியோர் பேசியபின் முரசொலி மாறன் தலைமையுரையாற்றினா.

பிற்பகல் நிகழ்ச்சி

பிற்பகல் நிகழ்ச்சி திருமதி யு. ஆர். ஜீவரத்தினம் இன்னிசையுடன் துவங்கியது.

அடுத்து, பாவலர் வரதராசன் கலை நிகழ்ச்சியும், இசைமுரசு நாகூர் ஆனீதா எம்.எல்.சி. நிகழ்ச்சியும நடைபெற்றது.

உணவு அமைச்சர் ப. உ சண்முகம், நாடாளுமன்ற தி. மு. க. குழுக்களின் தலைவர் இரா. செழியன, மாநிலங்களவை தி. மு. க குழுத் தலைவர் தில்லை வில்லாளன், கோவை செழியன் எம்.எல்.ஏ., புலவர் அறிவுடைநம்பி எம்.எல்.சி., சுற்றுலா வாரியத் தலைவர் ஏ. வி. பி. ஆசைத்தமபி, குடிசை மாற்று வாரியத் தலைவர் இராம.அரங்கணணல் எம எல்.ஏ, கொடுமுடி கிருஷ்ணன், துரை முருகன் எம். எல்.ஏ., அனபில தர்மலிங்கம் எம்.எல்.ஏ., நன்னிலம் நடராசன், கோ. விசுவநாதன் எம.பி., செல்வி கஸ்தூரி ஆகியோர் பேசினர்.

இறுதியாகப் பொதுச்செயலாளர் நாவலர் சிறப்புரையாற்றினுர்.

பிகனர், சிவகங்கை சேதுராசன் குழுவினரின் 'உனனைத்தான் தம்பி' நாடகம் நடைபெற்றது.

இரண்டாம் நாள் நிகழ்ச்சி

இரண்டாம் நாள் காலை நிகழ்ச்சி மணி—சாமி குழுவினரின் கலை நிகழ்ச்சியுடன் துவங்கியது.

அடுத்து, மதுரை சோமுவின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

அடுத்து, பேராசிரியர் க. அன்பழகன, மககளவை தி.மு க. குழுத் தலைவர் நாஞ்சில் கி. மனோகரன, அமைச்சர்கள் மு. கண்ணப்பன், மன்னை ப. நாராயணசாமி, க. இராசாராம், திருமதி சத்தியவாணி முத்து, செ. மாதவன், எஸ் ஜே. சாதிக் பாட்சா, எஸ், இராமச்சந்திரன், சி.பா. ஆதித்தனுர், எஸ் எஸ். தென்னரசு எம.எல.ஏ., சென்னை துணைமேயர் என. வி. என். சோமு, கே. ஏ. கிருஷ்ணசாமி எம். பி., ஏ. பி. சனுர்த்தனம் எம்.எல்.சி, செ. கந்தப்பன் எம.எல.ஏ., மஜத், சக்தி கதிர்வேல், பி ஆர்.இலட்சுமிகாந்தன ஆகியோர் பேசினர்.

மாலை நிகழ்ச்சி

மாலையில் தீர்மானங்களை முன்மொழிந்தும்--வழிமொழிந்தும் பலர் பேசியபின, கழகப் பொருளாளர் புரட்சி நடிகர் எம். ஜி ஆர். அவர்கள் பேசினுர்.

இறுதியாகக் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் சிறப்புரையாற்றினா.

இரவு, முரசொலி அடியார் நடித்த 'தங்க வங்கம்' நாடகம் நடைபெற்றது.

எல். கணேசன் திறப்புரை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் நமக்குரிய இடத்தைப் பெறப் பாடுபட்டுவருகிருர்கள், அந்த உரிய இடத்தை நாம பாடுபட்டேனும பெற்றுக வேண்டும்.

இந்தியா முழுவதற்கும் -- ஒட்டுமொத்தமான எல்லைப் பாதுகாப்பு -- தேசிய நலன் ஆகியவற்றுக்கு நாங்கள் பக்கபலமாக என்றும் இருப்போம்; ஆனுல் அதறகாக தமிழ் இனத்தின நலனுக்கு எதிராக இருக்கமாட்டோம!

தேசிய இனங்களின் தனித்தன்மை காபபாற்றப்பட வேணடும்; வறுமையே இல்லாத ஒற்றுமை எனபது சர்வாதிகாரம்; வேற்றுமையில் ஒற்றுமை காண்பதுதான் சனநாயகம்!

'தேச பக்தி' என்பது சுதந்தரத்திற்காகப் போராடுவது மட்டுமல்ல -- பெற்ற சுதந்தரத்தைப் பேணிக் காப்பதில்தான் தேச பக்தி இருக்கிறது.

நடந்து முடிந்த தேர்தலில் எல்லா மாநிலங்களிலும் இந்திரா காங்கிரசார் வெற்றிபேற்றிருப்பதை வைத்துக்கொண்டு இங்கேயும் அப்படி வெற்றிபெற முடியும் என எண்ணுகிருர்கள்.

ஐரோப்பாக் கண்டம் முழுதும் வெற்றி கண்ட வீரன நெப்போலியன், 'வாட்டர்லூ' என்ற சிறிய பகுதியில் நெல்சனிடம் தோல்வி கண்டான்; அதுபோல், இந்திரா காங்கிரசார, மற்ற எலலா மாநிலங்களிலும் வெற்றிபெற்ருலும், தமிழ்நாட்டில அது நடககாது!"

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible]